


**06.08.2024**

தலைப்புச் செய்திகள்

1. காலநிலை மாற்றங்களை எதிர்கொள்வதற்கான நிதியுதவி மற்றும் தொழில்நுட்பங்களை வழங்க, வளர்ந்த நாடுகளை இந்தியா வலியுறுத்தும் என்று குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. பங்களாதேஷில் நிலவும் அரசியல் சூழல் குறித்து மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், நாடாளுமன்ற இரு அவைகளிலும் இன்று பிற்பகல் அறிக்கை தாக்கல் செய்கிறார்.

3. சமூகத்தின் அனைத்து பிரிவினரையும் மேம்படுத்தும் திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. தூத்துக்குடியை சேர்ந்த 22 மீனவர்களை இலங்கை கடற்படையினர் இன்று கைது செய்துள்ளனர்.

5. பாரீஸ் ஒலிம்பிக் ஆடவர் ஹாக்கி அரையிறுதியில் இந்தியா இன்றிரவு ஜெர்மனியை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

இந்தியா மற்றும் ∴பிஜி நாட்டு பரஸ்பர நலன் சார்ந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல இருநாடுகளும் இணைந்து முழுமையான ஆற்றலுடன் செயலாற்றுவதன் அவசியத்தை குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தி உள்ளார்.

∴பிஜி தலைநகர் சுவாவில் அமைந்துள்ள அந்நாட்டின் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், காலநிலை மாற்றத்திற்கான சவால்களை எதிர்கொள்வதற்கான நிதியுதவி மற்றும் தொழில்நுட்பங்களை வழங்க வளர்ந்த நாடுகளிடம் இந்தியா தொடர்ந்து வலியுறுத்தும் என்றார்.

காலநிலை மாற்றத்திற்கான நீதியை நிலைநாட்ட ஃபிஜி மற்றும் இதர கடல்சார் நாடுகளுடன் இந்தியா துணை நிற்கும் என்றும் அவர் உறுதியளித்தார்.

இதனைத் தொடர்ந்து சுவாவில் அதிநவீன மருத்துவமனை, இந்திய தூதரகம் மற்றும் கலாச்சார மைய வளாகம் அமைப்பதற்கான திட்டங்கள் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்ச்சியில் குடியரசு தலைவரும், ஃபிஜி நாட்டு பிரதமர் ரபுகாவும் பங்கேற்றனர்.

சுவாவில் உள்ள மகாத்மா காந்தி நினைவு உயர்நிலைப் பள்ளியில் அமைந்துள்ள காந்தியடிகளின் சிலைக்கு அவர் மலரஞ்சலி செலுத்தினார்.

ஃபிஜி நாட்டு அரசின் உயரிய விருதான **Companion of the Order** விருது குடியரசு தலைவருக்கு வழங்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖

அனைத்து கட்சி கூட்டம்

பங்களாதேஷ் நாட்டின் அரசியல் நடவடிக்கைகள் குறித்து மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், நாடாளுமன்ற இருஅவைகளிலும் இன்று பிற்பகல் அறிக்கை தாக்கல் செய்கிறார்.

முன்னதாக புதுதில்லியில் இன்று காலை நடைபெற்ற அனைத்து கட்சி தலைவர்கள் கூட்டத்தில் பங்களாதேஷ் அரசியல் நிலைமைக் குறித்து அவர் விரிவாக எடுத்துரைத்தார்.

மத்திய அமைச்சர்கள் திரு. ராஜ்நாத் சிங், திரு. அமித்ஷா, திரு. ஜே.பி.நட்டா, மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தி, திமுக, திரிணமுல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், ராஷ்ட்ரிய ஜனதாதள், சமாஜ்வாடி உள்ளிட்ட கட்சிகளின் நாடாளுமன்ற தலைவர்கள் இதில் பங்கேற்றனர்.

அனைத்துகட்சி கூட்டத்தில் உறுப்பினர்கள் வழங்கிய ஒருமனதான ஆதரவிற்கு டாக்டர் ஜெய்சங்கர் தமது சமூக வலைதளப் பதிவில் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

முன்னதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையில் நேற்று நடைபெற்ற பாதுகாப்பிற்கான மத்திய அமைச்சரவை கூட்டத்தில் பங்களாதேஷ் நாட்டு நிலைமைக் குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖

மக்களவை – தீவிரவாதம்

நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் நக்சல் தீவிரவாதம் பெருமளவில் குறைந்திருப்பதாக மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. நித்தியானந்த ராய் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று துணை கேள்விகளுக்கு பதிலளித்த அவர், நக்சல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கையும் 126-லிருந்து 38 ஆக குறைந்துள்ளது என்றார்.

2014-ம் ஆண்டு வரையான 10 ஆண்டு காலத்தில் ஆயிரத்து 800 பாதுகாப்பு படை வீரர்கள் தீவிரவாதத்திற்கு பலியான நிலையில்,

கடந்த 10 ஆண்டுகளில் இது 509 ஆக குறைந்துள்ளது என்று குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

சைபர்

சைபர் குற்ற சவால்களை தடுக்க ஒருகோடியே 92 லட்சம் சிம் கார்டுகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சவுத்ரி தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இன்று பேசியஅவர், சைபர் குற்றங்களுக்கு எதிராக எந்த சமரசத்திற்கும் இடமில்லை என்று தெளிவுபடுத்தினார்.

சைபர் தடுப்பு மேலாண்மை இயக்கத்தில் பெறப்பட்ட ஏழரை லட்சத்திற்கும் மேற்பட்ட புகார்களின் அடிப்படையில் 2 ஆயிரத்து 400 கோடி ரூபாய் பாதுகாக்கப் பட்டிருப்பதாக கூறியுள்ளார்.

சைபர் குற்ற புகார்களை தெரிவிக்க 1 9 3 0 இலவச தொலைபேசி எண் நடைமுறையில் உள்ளதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

**BIMSTEC**

**BIMSTEC** நாடுகளின் வர்த்தக உச்சிமாநாடு புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், இந்த 3 நாள் மாநாட்டை தொடங்கி வைக்கிறார்

மத்திய வர்த்தக தொழிற்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் உள்ளிட்ட தலைவர்கள் இதில் பங்கேற்கின்றனர்.

**BIMSTEC** நாடுகளிடையே வர்த்தகம் மற்றும் முதலீடுகள் தொடர்பான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த உச்சிமாநாடு நடைபெறுகிறது.

இம்மாநாட்டில் இலகுவான வர்த்தகம், எரிசக்தி பாதுகாப்பு, உள்ளடக்கிய வளர்ச்சி, நிலையான மேம்பாடு உள்ளிட்டவை குறித்து விரிவாக விவாதிக்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

சமூகத்தின் அனைத்து பிரிவினரையும் மேம்படுத்தும் திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமை செயலகத்தில் இன்று நடைபெற்ற மாநில திட்டக்குழுவின் 5-வது கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சியாக மட்டுமல்லாமல், சமூக வளர்ச்சியாக இருக்க வேண்டும் என்றார்.

காலை உணவு திட்டத்தால் பள்ளிகளில் மாணாக்கரின் வருகை அதிகரித்துள்ளதோடு, புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் கல்லூரிக்கு செல்லும் மாணவிகளின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளதாக கூறினார்.

தொழில்வளர்ச்சி, சமூக மாற்றம் கல்வி மேம்பாடு ஆகிய அனைத்தும் சீராக நடக்க வேண்டும் என்றார்.

மகளிர் உரிமைத்தொகை மூலம் பெண்களின் பொருளாதார சுதந்திரம் உயர்ந்துள்ளதாக முதலமைச்சர் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் அரசின் முன்னோடி திட்டங்கள் பொதுமக்களை சென்றடைந்தது தொடர்பான ஆய்வு முடிவுகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖

மீனவர்கள்

இலங்கை கடற்படையினர் தூத்துக்குடியை சேர்ந்த 22 மீனவர்களை இன்று கைது செய்துள்ளனர்

இம்மீனவர்கள் மன்னார் வளைகுடா பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது சர்வதேச கடல் எல்லையை தாண்டியதாக கூறி கைது செய்யப்பட்டனர்.

பின்னர் மன்னார் கடற்படை தளத்திற்கு விசாரணைக்காக இவர்கள் கொண்டுசெல்லப்பட்டனர்

இந்நிலையில் மீனவர்களை விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை மத்திய மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டுமென்று மீனவ அமைப்புகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

தரங்சக்தி

கோவை சூலூர் விமானப்படை தளத்தில் தரங்சக்தி 2024 சர்வதேச வான் சாகச பயிற்சிகள் இன்று மாலை தொடங்குகின்றன.

வரும் 14-ம் தேதிவரை நடைபெறவுள்ள இந்த வான் பயிற்சியில் அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, ஐக்கிய அரபு அமீரகம், சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளின் அதிநவீன போர் விமானங்கள் களம் காண்கின்றன.

இந்தியாவின் சார்பில் தேஜஸ், ர.்.பேல், மிரேஜ், ஜாக்குவார், மிஹ் உள்ளிட்ட அதிநவீன போர் விமானங்கள் இப்பயிற்சியில் பங்கேற்கின்றன.

இரண்டாவது கட்டமாக வரும் 29-ம் தேதி தொடங்கி, அடுத்தமாதம் 14-ம் தேதிவரை ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் வான் பயிற்சிகள் நடைபெற உள்ளன.

❖❖❖❖❖❖❖❖

கோவில்

மயிலாடுதுறை மாவட்டம் திருக்கடையூர் அருள்மிகு அபிராமி அம்மன் சமேத அமிர்த கடேஸ்வரர் ஆலயத்தில் ஆடிப்பூர தேர்த்திருவிழா இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

இருவரி

அரியலூர் மாவட்ட அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணாக்கர் நேரடி சேர்க்கைக்கான காலஅவகாசம் வரும் 16-ம் தேதிவரை நீட்டிக்கப்பட்டு உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு. ரத்னசாமி தெரிவித்துள்ளார்.

திருச்சி மாவட்டத்தில் சிறப்பாக செயல்பட்ட தொழில் முனைவோர் சுற்றுலா விருதுகளை பெற **tntourismawards.com** என்ற இணையதள முகவரியில் வரும் 20-ம் தேதிக்குள் பதிவேற்றம் செய்யுமாறு ஆட்சித்தலைவர் திரு. பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் 50 சதவிகித மானியத்தில் நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டத்திற்கு மகளிர் வரும் 20-ம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் டாக்டர். உமா கேட்டுக் கொண்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

கோவில்

செங்கல்பட்டு மாவட்டம் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில் 53-வது ஆடிப்பூர விழா இன்று தொடங்கியது

பக்தர்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

❖❖❖❖❖❖❖❖

வானிலை

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், தஞ்சை, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, புதுக்கோட்டை மாவட்டங்களில் இன்றும் நாளையும் கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

மன்னார் வளைகுடா, தென் தமிழக கடலோரம், குமரிக்கடல், வட தமிழக கடலோரம், தென் மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அடுத்த 5 நாட்களுக்கு இதற்குட்பட்ட பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

❖❖❖❖❖❖❖❖

ஒலிம்பிக்

பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில் இந்திய தடகள வீரர்கள் இன்று களமிறங்க உள்ளனர்.

ஆடவர் ஹாக்கி அரையிறுதியில் இந்தியா இன்றிரவு உலக சாம்பியன் ஜெர்மனியை எதிர்கொள்கிறது.

ஆடவர் ஈட்டி எறிதல் போட்டியில் இந்தியாவின் தங்கமகன் நீரஜ் சோப்ரா இன்று களம் காண்கிறார்.

மகளிர் மல்யுத்த போட்டியின் 50 கிலோ எடைபிரிவில் வினேஷ் ஃபோகத் இன்று காலிறுதிக்கு முந்தைய சுற்றில் போட்டியிடுகிறார்.

டேபிள் டென்னிஸ் ஆடவர் குழு 2-வது சுற்றில் இந்தியாவின் ஹர்மித் தேசாய், மானவ் தாக்கர், அஸந்தா ஷரத் கமல் ஆகியோர் - சீன குழுவினருடன் இன்று மோதுகின்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖